மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், நீங்கள் சுருக்கமாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *ஆகமொத்தம் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மட்டும்தான் இணை மின் உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில்* co–generation *திட்டப் பணிகள் 40 சதவிகிதம் மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஇ) நீர்நிலைகள், சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிலக்கோட்டையில் பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயில் இருக்கின்ற முட்களையெல்லாம் நான் பதவியேற்றவுடனேயே அப்புறப்படுத்திவிட்டேன். ஆனால், மீதமுள்ள குளங்கள் அனைத்திலும் சீமைக் கருவேல முட்கள் நிறைந்திருக்கின்றன. நிலக்கோட்டைத் தொகுதி மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குளங்களிலும் சீமைக் கருவேல முட்களை அகற்றினால் குடிதண்ணீர் பிரச்சினை இல்லாமல் இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*

முற்பகல் 10–25

(அஈ) மாதவரம் பால் பண்ணை மருத்துவமனை, வசதிகள் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட மாதவரம் பால்*